தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1981 ஏப்ரல் 30.

சித்திரை 18, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

முன்னே தான் சமமாக இருந்து பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக் கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. சாம்பசிவம் மறைவு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. சாம்பசிவம் அவர்கள் 29—4—1981-ம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாம்பசிவம் அவர்கள் 1953 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதியிலிருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1962 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரை சேலம் உள்ளாட்சிமன்றத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றனர்).